செ.வெ.எண்: 534/2021 நாள்: 17.11.2021

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சியின் வாயிலாக திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி ஏலகிரிமலை அத்தனாவூரில் ரூ.135 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதியை திறந்து வைத்தார்கள். இதனை தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதவமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சியின் வாயிலாக திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி ஏலகிரிமலை அத்தனாவூரில் ரூ.135 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதியை திறந்து வைத்தார்கள். இதனை தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து மாணவியர்களுக்கும் பொது மக்களுக்கும் மாணவியர்களுக்கும் இனிப்புகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிற்கு ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.க.தேவராஜி அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி ஏலகிரிமலை அத்தனாவூரில் அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதி கட்டடத்தில் தரைத்தளம் 201.70 ச.மீட்டர் பரப்பளவில் சமையலறை, சாப்பிடுவதற்கு உணவு அருந்தும் அறைகள், குளியல் மற்றும் கழிவறைகள், முதல் தளம் 201.70 ச.மீட்டர் பரப்பளவில் மாணவியர்கள் தங்கும் அறைகள், குளியல் மற்றும் கழிவறைகள், இரண்டாம் தளம் 201.70 ச.மீட்டர் பரப்பளவில் மாணவியர்கள் தங்கும் அறைகள், குளியல் மற்றும் கழிவறைகள் மற்றும் மாடிபடிகள் 12.60 ச.மீட்டர் பரப்பளவு என மொத்தம் 617.70 ச.மீட்டர் பரப்பளவில் ரூ.135.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

தற்போது இவ்விடுதியில் 50 பள்ளி மாணவியர்கள் வசதியாக தங்கும் விசாலமான ஆறு தங்கும் அறைகளும், மின்வசதி, தண்ணீர் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நவீன வசதியுடன் வடிவமைக்கப் பட்ட குளியல் மற்றும் கழிப்பறைக் கூடமும், சூரிய மின்னொளி

வசதியும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மாணவியர் விடுதிக்கு உயர்ந்த வண்ணப்பூச்சுடன் கட்டடம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு மாணவியர்கள் நன்றாக படித்து தங்களது வாழ்வில் உயாந்த நிலையை அடைய வேண்டும்.

மேலும் ஏலகிரிமலை அத்தனாவூர் அரசினர் உண்டு உறைவிடப்பள்ளியில் படிக்கின்ற 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களின் நோட்டு புத்தகத்தில் எழுதியுள்ள பாடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு நன்றாக படிக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பழங்குடியினர் நலத்துறை திட்ட அலுவலர் திருமதி.சாந்தி, தாட்கோ செயற் பொறியாளர் திரு.ப.இமாமமகாசிம், உதவி செயற் பொறியாளர் திரு.கண்ணன், வட்டாட்சியர் திரு.சிவபிரகாசம், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.இராஜஸ்ரீ கிரிவேலன், ஊராட்சி செயலாளர் திரு.சண்முகம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**